## நவம்பர் – 18 – பொதுக்கால 33ம் ஞாயிறு

**மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள்மீது வருவதைக் காண்பார்கள்- மாற்:13:26**

### முதல் வாசகம் :தானியேல் 12 : 1 - 3

அக்காலத்தில் உன் இனத்தார்க்குத் தலைமைக் காவலரான மிக்கேல் எழும்புவார். மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராத துன்பகாலம் வரும். அக்காலத்தில் உன் இனத்தார் விடுவிக்கப்படுவர். நூலில் யார் யார் பெயர் எழுதப்பட்டுள்ளதோ. அவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள். இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர். அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர். வேறு சிலரோ வெட்கத்திற்கும், முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர். ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்.

**பதில்பாடல் :** இறைவா என்னைக் காத்தருளும் உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்.

### இரண்டாம் வாசகம் : ஏபிரேயர் 10 : 11 – 14, 18

சகோதர சகோதரிகளே! ஒவ்வொரு குருவும் நாள்தோறும் இறை ஊழியம் புரியும்போது மீண்டும் மீண்டும் அதே பலிகளைச் செலுத்தி வருகிறார். அவையோ பாவங்களை ஒருபோதும் போக்க இயலாதவை. ஆனால், இவர் ஒரே பலியைப் பாவங்களுக்காக என்றென்றைக்கும் எனச்செலுத்திவிட்டு, கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்துள்ளார். அங்கே தம் பகைவர் தமக்குக் கால்மணை ஆக்கப்படும்வரை காத்திருக்கிறார்.தாம் தூயவராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவராக்கினார். எனவே பாவமன்னிப்பு கிடைத்தபின் பாவத்திற்குக் கழுவாயாகச் செலுத்தும் பலிக்கு இடமேயில்லை.

### நற்செய்தி : மாற்கு 13 : 24 – 32

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: ”அந்நாள்களில் அவ்வேதனைகளுக்குப் பிறகு கதிரவன் இருண்டுவிடும் நிலா ஒளிகொடாது. விண்மீன்கள் வானத்திலிருந்து விழுந்த வண்ணமிருக்கும் வான்வெளிக் கோள்கள் அதிரும்.அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள் மீது வருவதைக் காண்பார்கள். பின்பு அவர் வானதூதரை அனுப்பி, அவர்கள் மண்ணுலகில் ஒரு கோடியிலிருந்து விண்ணுலகில் மறுகோடிவரை நான்கு திசைகளிலிருந்தும் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்ப்பார்.” அத்தி மரத்திலிருந்து ஓர் உண்மையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதன் கிளைகள் தளிர்த்து இலைகள் தோன்றும்போது கோடைக்காலம் நெருங்கி வந்துவிட்டது என நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அவ்வாறே இவை நிகழ்வதைக் காணும்போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.இவையனைத்தும் நிகழும்வரை இத்தலைமுறை ஒழிந்து போகாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும் ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா.”ஆனால் அந்த நாளையும் வேளையையும் பற்றித் தந்தைக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. விண்ணகத்திலுள்ள தூதருக்கோ மகனுக்கோ கூடத்தெரியாது“ என்றார்.

**தியானம்:** கடவுளைப் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம் (நீதி.1:9). இன்று மனித சமூகத்தில் கடவுளைப்பற்றிய அச்சமும் கடவுளைப்பற்றிய அறிவும் குறைந்துவருவதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். மாறிவரும் நவநாகரீக உலகத்தில் அறிவு ஜீவிகள் என்று அழைக்கப்படுகின்ற மனிதர்கள் தங்களுடைய அறிவினால் இந்த உலகத்தை அறிந்து, உலகத்து இன்பங்களை அனுபவித்து மகிழ்வாக வாழலாம் என்று நினைத்து தோல்விகளின் விளிம்புகளில் இருப்பதை நாம் இன்று கண்டு கொண்டிருக்கின்றோம். “உலகை ஆய்ந்தறியும் அளவுக்கு ஆற்றல் மனிதர்களுக்கு இருந்தபோதிலும் இவற்றுக்கெல்லாம் ஆண்டவரை இன்னும் மிக விரைவில் அறியத் தவறியது ஏன்?” (சாஞா.13:9) என்று சாலமோனின் ஞானநூல் ஆசிரியர் வினவுகின்றார். தவறான வாழ்க்கை முறைகளும், பாவ வாழ்க்கையும், இன்பத்தை எப்படியாவது துய்க்க வேண்டும் என்று போதைக்கும் கேளிக்கைகளுக்கும் தங்களை விற்றுப்போட்ட மனிதர்கள் இன்று தனிமைக்கும் வெறுமைக்கும் ஆளாகி மன போராட்டங்களுக்கும், தற்கொலைக்கும் தங்களை பலியாக்கிக் கொள்கின்றார்கள். இந்தகைய சூழலில் ஆண்டவர் நம்மைப்பார்த்து எச்சரிக்கின்றார் ஒரு மனிதன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தனது ஆத்துமாவின் கதி என்ன என்று யோசிக்காமல் செயல்பட்டால் அதனால் அவன் அடையப்போகும் தண்டனை எவ்வளவு பெரியது, எவ்வளவு கொடியது. அவன் வாழ்ந்த வாழ்க்கையின் பயன்தான் என்ன? (மத்.16:26) என்று. ஆகவே தன்னுடைய வாழ்வை இவ்வுலக இன்பங்களினால் கட்டியெழுப்பாமல் விண்ணுலகம் சார்ந்த செயல்பாடுகளினால் நிறைவு செய்கின்ற போது இறுதிநாளில் மானிடமகன் தீர்ப்பிட வருகின்றபோது அவருக்கு முன்னால் நிற்பதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வோம். இறுதிநாளில் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்ந்த வாழ்வைக் குறித்தே கணக்குக் கொடுக்க வேண்டும் (உரோ.14:12). எனவே மற்றவர்களைச் சுட்டிக்காட்டி தப்பித்துக்கொள்ளலாம் என்றோ அவர் இப்படி இருந்தார், இவள் இப்படி செயல்பட்டார் அதனால்தான் நான் இவ்வாறு சிந்தித்தேன், செயல்பட்டேன் என்றோ சாக்குப்போக்குச் சொல்ல வழியில்லை. எனவே “அன்பர்களே, நம்பிக்கைக் கொள்ளாத தீய உள்ளம் வாழும் கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்களுள் எவருக்கும் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுள் எவரும் பாவத்தால் ஏமாற்றப்பட்டு, கடின உள்ளத்தினர் ஆகாதவாறு, ஒவ்வொருநாளும் “இன்றே” என எண்ணி நாள்தோறும் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுங்கள். தொடக்கத்தில் நாம் கொண்டிருந்த திட நம்பிக்கையை இறுதிவரை உறிதியாகப் பற்றிக் கொண்டிருந்தால் நாமும் கிறிஸ்துவின் பங்காளிகளாவோம்” (எபி 3:12-14). ஆகவே கிறிஸ்துவின் நாளுக்காய் நம்மை தயாரித்துக் கொள்ளுவோம்.